முருகப்பெருமான் துணை

**மகான் திருமூல நாயனார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

14.03.2023, செவ்வாய்கிழமை

1. மக்களின் வாழ்வை ஞானவழி
   மகத்துவம்பட ஆற்றலாக மாற்ற
   ஆக்கமுடன் அவதாரம் எடுத்த
   ஆறுமுக அரங்கமகா ஞானியே
2. ஞானியே உன் பெருமை கூறி
   ஞாலமதில் சுபகிருது சால் திங்கள்
   இனிமைபட முப்பான்திகதி குசன்வாரம்
   (சுபகிருது வருடம் மாசி மாதம் 30 ம் நாள், 14.03.2023, செவ்வாய்கிழமை)
   இயம்புவேன் திருமூல நாயனார் யானும்
3. யானும் அனுகூல ஆசிதனை
   உலகநலம் காண உரைப்பேன்
   ஞான வாழ்வை மக்களடைய
   ஞானிகளை வணங்க வேண்டும்
4. வேண்டிவேண்டி வருதல் காண
   வினையெல்லாம் தானாய் ஓடும்
   தொண்டுசெய்து அரங்கன்வழி
   தொண்டர்களென அடையாளம் கூட்ட
5. கூட்டவே ஞானிகள் அனுகூலம்
   குறைவின்றி நெருக்கம் ஆகும்
   கட்டமெல்லாம் விலகி சடுதி
   கந்தப்பெருமான் கருணையும்
6. கருணையும் கவசமாகத் துணைவர
   கவலை எல்லாம் பறந்து போகும்
   தருமம் செய்கின்ற வண்ணம்
   தக்க மனபலம் ஈடுபாடு பெருகி
7. பெருகியே அதற்குத் தேவையான
   பொருள்வளமும் உண்டாகும்
   வருங்காலம் எங்கும் எதிலும்
   வல்லமையாக வளர்ச்சியாக மாறி
8. மாறியே உலகியல் வாழ்வில்
   மாயச் சோதனையில் அகப்படா
   தேறியே பெரும் மாற்றமாக
   தெய்வ பலமுமாகக் கூடும்
9. கூடவே மனிதப் பிறப்பாக
   குவலயத்தில் கண்ட போதும்
   ஈடேற்றம் குருவழித் தேறி
   இனிபிறவா சூட்சுமம் கண்டு

10. கண்டுமே பிறவிப் பயன்தனை
கணக்காய் அவரவர் தானும்
உண்டான பயிற்சி இல்லாமலே
உயர் தொண்டால் அரங்கன் ஆசிபட
11. ஆசிபட மக்கள் அடையநேரும்
அழியாமை எனும் ஞானம்
வாசிவசமாகி பெரும் பேறு
வையகத்தார் அடைய நேரும்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–